# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1507/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனியப்பன் | த-பெ | ராமு |
| ஊர்: | : | பழைய ஆத்தங்குடி | | |
| வயது: | : | 64/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026

**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் பழைய ஆத்தங்குடியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 23.02.2022 அன்று பழைய ஆத்தங்குடி வளையில் இருசக்கர வாகனமும் டாடா எஸ் வாகனமும் மோதி சாலை விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். அன்று மாலை 4.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து அங்கு ஒரு வரைபடம் தயார் செய்தார்கள். அதில் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 2.** போலீசார் சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தில் காயம்பட்டு இறந்த நபர் எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். மேற்படி நபர் எனக்கு எந்த உறவு என்றால் எனது தம்பியின் மகன் ஆவார். வண்டியை ஓட்டிய முருகேசன் எனக்கு என்ன உறவு என்றால் எனது தம்பி ஆவார். சம்பவம் குறித்து எனக்கு எப்போது தெரியும் என்றால் காலையில் தெரியும். சம்பவ இடத்திற்கு நான் ஏதார்த்தமாக போகவில்லை என்றால்

சரிதான். மற்றொரு சாட்சி கையொப்பம் செய்த ரமேஷ் எனது உறவினர் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தில் காயம்பட்ட மற்றும் இறந்த நபர்கள் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.24 10:57:30 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1507/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மங்களம் | க-பெ | சுப்பையா |
| ஊர்: | : | பழைய ஆத்தங்குடி | | |
| வயது: | : | 58/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026

**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1. நான் தற்சமயம் பழைய ஆத்தங்குடியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 13.02.2022 அன்று நான் வீட்டில் இருந்தபோது எனது கொழுந்தனார் முருகேசன் என்பவர் அவரது மகன் குருதர்சனை முடிதிருத்தம் செய்வதற்காக ஆத்தங்குடியில் உள்ள சலூன் கடைக்கு சென்றபோது காலை 11.30 மணிக்கு பழைய ஆத்தங்குடி வளைவு சாலையில் டாடா எஸ் வாகனம் ஒன்று அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எங்களுக்கு தகவல் வந்தது. சம்பவத்தை கேள்விபட்டு நான் அங்கு சென்று பார்த்தபோது முருகேசன் மற்றும் குருதர்சனுக்கு தலை மற்றும் நெற்றி ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு இரத்த வெள்ளத்தில் இருந்தார்கள். அவர்களை சிகிச்சைக்காக குறிப்பாக முருகேசன் என்பவரை முதலில் திருமயம் அரசு மருத்துவமனைக்கும் பின்னர் மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கும் அழைத்து சென்றோம். காயம்பட்ட முருகேசனை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றோம். இதன் இடையில் அங்கிருந்தவர்கள் குரு தர்சனை சூரக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். அவர் பின்னர் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விபத்தை ஏற்படுத்திய

வாகனத்தின் ஓட்டுநர் ஆஜர் எதிரிதான். அவர் பக்கத்து ஊர்க்காரர்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை கேள்விபட்டு தான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்னர் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.24 10:57:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1507/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜு | த-பெ | சுப்பையா |
| ஊர்: | : | பழைய ஆத்தங்குடி | | |
| வயது: | : | 35/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டைல்ஸ் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் பழைய ஆத்தங்குடியில் வசித்து டைல்ஸ் வேலை செய்து வருகிறேன். கடந்த 13.02.2022 அன்று நான் வீட்டில் இருந்தபோது எனது சித்தி ராமலட்சுமி என்பவர் என்னை தொடர்பு கொண்டு எனது சித்தப்பா முருகேசன் மற்றும் அவரது மகன் குருதர்சன் எனது தம்பி ஆகிய இருவரும் முடிதிருத்தம் செய்வதற்காக ஆத்தங்குடியில் இருசக்கர வாகனமான XL ல் சென்று கொண்டிருந்தபோது பழைய ஆத்தங்குடி பேருந்து நிறுத்தத்தில் டாடா எஸ் வாகனமானது அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அதில் இருவருக்கும் காயம் ஏற்பட்டதாக என்னிடம் சொன்னார்கள். சம்பவத்தை கேள்விபட்டு நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது முருகேசன் எனது சித்தப்பாவிற்கு வலது முழங்காலில் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. மேலும் அவருக்கு தலை, நெற்றி ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டிருந்தது.

2. எனது தம்பி குருதர்சனுக்கு நெற்றியில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. அங்கிருந்த நான் மற்றும் எனது அண்ணன் காயம்பட்ட எனது சித்தப்பாவை முதலில் சிகிச்சைக்காக இருசக்கர வாகனத்தில் திருமயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்த மருத்துவர்கள் எனது சித்தப்பா உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக சொன்னார்கள். ஆகையால் அவரை புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக ஆம்புலன்ஸில் அழைத்து சென்றோம். இதன் இடையே காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது தம்பி குருதர்சன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக நான் தெரிந்து கொண்டேன. விபத்து ஏற்படுத்தியவர் கீழசேவல்பட்டி மணி என்று நான் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை சம்பவ

சமயத்தில் விசாரணை செய்தார்கள். அவர்களிடம் மேற்படி விபரங்கள் நான் சொன்னேன்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்னர் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் அனைத்தும் நான் கேள்விபட்டு தான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி விபத்து எப்படி நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.24 10:57:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1507/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராசு | த-பெ | பழனியப்பன் |
| ஊர்: | : | பழைய ஆத்தங்குடி | | |
| வயது: | : | 38/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் வங்கி மேலாளர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026

**எதிரி ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் பழைய ஆத்தங்குடியில் வசித்து தனியார் வங்கியில் மேலாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 13.02.2022 அன்று நான் வீட்டில் இருந்து காலை 11.45 மணிக்கு இருசக்கர வாகனத்தில் ஆத்தங்குடிக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது கோனாபட்டில் இருந்து ஆத்தங்குடிக்கு பழைய ஆத்தங்குடி பேருந்து நிறுத்தம் வழியாக சென்று கொண்டிருந்தபோது டாடா எஸ் வாகனமானது ஆத்தங்குடியில் இருந்து கோனாபட்டுக்கு வந்து கொண்டிருந்தது. அப்போது அந்த வழியாக வந்த XL இருசக்கர வாகனத்தில் முருகேசனும் அவரது மகன் குரு தர்சனும் சென்று கொண்டிருந்தார்கள். இருவாகனமும் சம்பவ சாலையில் ஒன்றுக்கு ஒன்று நேருக்கு நேராக மோதிக்கொண்டது. மோதியதை நான் பார்க்கவில்லை. இந்த விபத்தில் குரு தர்சனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. முருகேசனுக்கு தலை மற்றும் கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டது. குரு தர்சனுக்கு இரத்தம் அதிகமாக வழிந்த காரணத்தால் அந்த வழியாக வந்த இருசக்கர வாகனத்தில் அவரை ஏற்றி காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன்.

2. நானும் அந்த வாகனத்தை பின் தொடர்ந்து காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். காயம்பட்ட முருகேசனுக்கு சிகிச்சைக்காக திருமயம் மருத்துவமனையிலும் பின்னர் மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டதாக தெரிந்து கொண்டேன். குருதர்சன் வரும் வழியில் இறந்துவிட்டதாக கேள்விபட்டு தெரிந்து கொண்டேன். இந்த விபத்து குறித்து விபத்து ஏற்படுத்தியவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அசா1

புகார் அளித்தார். போலீசார் வழக்கு சமயத்தில் என்னை விசாரணை செய்யவில்லை. மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் மஞ்சினிபட்டியை சார்ந்த மணி என்று பின்னர் தெரிந்து கொண்டேன்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்னர் தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.24 10:57:49 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.